www.Padasalai.Net

மின்னஞ்சல்

முதன்மைக்கல்வி அலுவலகம், திருப்பத்தூர்

மூ.மு.எண்: 03715/ஆ3/2024 நாள்: 21.10.2024

திருப்பத்தூர் மாவட்ட அனைத்து வகை அரசு /நகராட்சி/நிதியுதவி / மெட்ரிக் உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு 17.10.2024 நாளிட்ட அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 020279/பி4/2024 தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

நடைபெற்று முடிந்த மார்ச் / ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுதேர்வினை எழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்), தலைப்பெழுத்து, தாய் மற்றும் தந்தை பெயர் (தமிழ்/ஆங்கிலம்), பிறந்ததேதி, புகைப்படம், பள்ளியின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின் இன்று 21.10.2024 மாலை 04.00 மணிக்குள் அசல் மதிப்பெண் சான்றுகள் மற்றும் திருத்தம் மேற்கொள்ள கோரும் இணைப்பு சான்றுகளுடன் **வேலூர், கல்புதூர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில்** சமர்பிக்க அனைத்து வகை அரசு /அரசு நிதியுதவி /சுயநிதி/மெட்ரிக் உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 020279/பி4/2024 நாள்: 17.10.2024.

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.

பெறுநர்

அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்

| | |
|---|---|
| 1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருப்பத்தூர்.<br>2. மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), திருப்பத்தூர். | தொடர் நடவடிக்கையின் பொருட்டு |

17.10.2024
4.21 PM
003715

அனுப்புநர்

திருமதி.ந.லதா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை –600 006.

பெறுநர்

அனைத்து அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

ந.க.எண்.020279/பி4/2024 நாள் :17.10.2024

முதன்மைக்கல்வி அலுவலகம்
18 OCT 2024
பெறப்பட்டது
திருப்பத்தூர் -635 601

ஐயா/அம்மையீர்,

www.Padasalai.Net

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச்/ஏப்ரல் 2024 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் – பள்ளி மாணவர்கள் – அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் – திருத்தங்கள் பதிவேற்றம் செய்தல் குறித்து – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

=====

நடைபெற்று முடிந்த மார்ச்/ஏப்ரல் 2024, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை எழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்), தலைப்பெழுத்து, தாய் மற்றும் தந்தை பெயர் (தமிழ்/ஆங்கிலம்), பிறந்த தேதி, புகைப்படம், பள்ளியின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திருத்தங்கள் கோரி தங்கள் அலுவலகத்தில் அசல் மதிப்பெண் சான்றிதழ்களுடன் பெறப்பட்ட விண்ணப்பங்களை, அனைத்து உதவி இயக்குநர்களும் **21.10.2024 முதல் 30.10.2024** வரையிலான நாட்களில் தங்களுக்கான **USER ID மற்றும் PASSWORD** பயன்படுத்தி **www.dge.tn.gov.in** என்ற இவ்வலுவலக இணையதளம் வழியாக திருத்தங்களை பதிவேற்றம் செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், தனித்தேர்வர்களிடமிருந்து திருத்தங்கள் கோரி பெறப்படும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை உரிய ஆவணங்களுடன் இணைத்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்./–
இயக்குநர்

**நகல் :**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. இணை இயக்குநர்கள் (கல்வி), புதுச்சேரி.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

} தகவலுக்காக.